**SC.No. 03/2018**
**Date: 17.07.2026**

**PW3 – பழனி**

**<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக ரோந்து பணிக்கு சென்றால் காவல் நிலைய பதிவேட்டில் பதிவு செய்து செல்வது வழக்கம் என்றால் சரிதான். ரோந்து பணிக்கு சென்ற நீங்கள் யார் யார் எந்த வாகனத்தில் சென்றீர்கள் என்ற விவரத்தை முதல் விசாரணையிலே போலிஸ் விசாரணையிலே கூறவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைது செய்யப்பட்ட 7 நபர்களை எந்தெந்த வாகனத்தில் காவல் நிலையம் அழைத்து வந்தோம் என்ற விவரத்தையும் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் காலை 5.30 மணியளவில் கைது செய்யப்பட்டு வந்த 7 நபர்களை விசாணை அதிகாரி காவல் நிலையம் முன்பு வைத்து புகைப்படமோ வீடியோ பதிவு செய்தார்கள் என்றால் இல்லை. நீங்கள் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எவ்வித சம்பவமும் நடக்கவில்லை உயர் அதிகாரிகள் புள்ளிவிவர கணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு அவர்களின் கீழ் பணிபுரியும் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.